உ

இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சூரு] யாழ்ப்பாணம்:- கர வருஷ மார்கழி மீ கரு உ வெள்ளிக்கிழமை (28 டிசம்பர் 1951) [இல - எரு]

கடல் கடந்த கலையின் கவின் சிறப்பு

அரசியல் அலை

கண்டனக் கட்சிகளின் கதம்பக் கச்சேரி

புகழுரைக் கூட்டத்தில் போர் முழக்கம்

ஐக்கிய தேசீயக் கட்சிக்கு - - - - - அடிக்குமேல் அடி

புதிய பாராளுமன்ற மேற்சபை அங்கத்தவர் திரு. பொ. நாகலிங்கம் அவர்களுக்கு புதன்கிழமை அன்று ஒரு உபசரணைக் கூட்டம். பல கட்சியினரும் பங்குபற்றினர். சிறப்பாக ஊர்வலமும் நடந்தது. இணுவில் ஸ்ரீ காளிங்கன் படக்காட்சி மண்டபத்தில் மாபெருங் கூட்டம்.

உபசரணைத் தலைவர் திரு. R. N. சிவப்பிரகாசம் அவர்கள் இடதுசாரிக் கட்சியினர் வகுப்புவாத விபரீதமின்றித் தலைவர் ஒருவரைத் தெரிந்தெடுத்தது அக் கட்சியினரின் நோக்கங்களை உள்ளபடி காட்டுகிறதென்று சொல்லிக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். தலைமை வகிக்க இருந்த Dr. S சுப்பிரமணியம் அவர்கள் வரமுடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவித்தமையால் கிராமச்சங்கத் தலைவர் திரு. S. மாணிக்கம் அவர்கள் தலைமை வகித்தார்கள். முதலாவதாகத் திரு. S J. V. செல்வநாயகம் அவர்கள் புதிய மேற்சபை அங்கத்தவரின் குணநிசயங்களை மெச்சிப் பேசிக் கூட்டத்தின் நோக்கத் திறகமையச் சொற்பெருக்கு இனிது ஆற்றி முடித்தார்.

திரு. Handy பேரின்பநாயகம் அவர்களும் திரு நாகலிங்கம் அவர்களின் அரசியல் ஞானத்தையும் அவருடன் தமக்குள்ள தொடர்பையும் எடுத்துக்காட்டிப் பாராட்டிப் பேசினர்.

திரு. C. சுந்தரலிங்கத்தின் முறை வந்தது. சம்பிரதாயப்படி புகழுரை செய்துவிட்டுச் சர்வகண்டனம் ஒன்று செய்தார். ஐ. தே. க. யிலும் இ. ச. ச. க. யிலும் L. S. S. P.) அநாசமுண்டு, அருவருப்புமுண்டு என்ற ஒரே கண்டனம். ஆனல் இப்போதைய அரசாங்கத்தை அகற்றவேண்டும் ஆகவே எதிர்க் கட்சிகள் ஒருங்கு சேரவேண்டும் என்ற ஒரே பல்லவியைப் பல இராகங்களிலும் பாடினர்.

தொடர்ச்சி 3-ம் பக்கம்

படித்தவர்களுக்குப் புத்திமதி

பண்டித நேரு புகட்டுகின்றார்

"இக்காலத்துப் படித்த இந்திய மக்கள் தேகமுயற்சி செய்வதைத் தவிர்த்து, அற்ப சம்பளத்துக்கேயெனினும் எழுத்து வேலையையே விரும்புகிறார்கள். தேகத் தொழிலை குறைந்ததென்று துரதிர்ஷ்டவசமாய் நினைக்கிறார்கள். அந்த நினைவு பிழை. பிழை மாத்திரமல்ல அது பயங்கரமானது. தேகத்தொழிலைத் தவிர்க்கும் வழிகாண முயல்வதை விட்டுத் தேகத் தொழிலுக்கு நல்ல மதிப்புக் கொடுக்கவேண்டியது ஒவ்வொருவருக்கும் கடனாய் இன்று அமைந்திருக்கின்றது. மேடைகள் மீதேறிப் பேசுவதல்ல, தங்கள் செயலாலேயே படித்தவர்கள் படியாதவர்களுக்கு முன் மாதிரியாய் நடக்க வேண்டும்" என்று பண்டிதநேரு அவர்கள் டெல்கியில் இந்திய விவசாய ஆராய்ச்சிச் சபையிற் பேசும்போது படித்தவர்களுக்குப் புத்திமதி புகட்டினர்.

தேவாரப் பண்ணின் தெவிட்டா இன்பம்

தமிழிசைச் சங்கத் தலைமைப் பேருரை

சென்னையில் மார்கழி 24ம் நாள் ஆரம்பமாய தமிழிசைச் சங்கத்தில் தலைமை தாங்கிச் செந்தமிழ்க் கலாநிதி திரு சு. நடேசபிள்ளை அவர்கள் நிகழ்த்திய தலைமைப் பேருரை.

தமிழிசைச் சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டு விழாவை நான் ஆரம்பித்து வைக்க வேண்டுமென்று சங்கத்தலைவரவர்கள் எனக்கிட்ட பணியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன். இப்பணியை ஆற்றுதற்குத் தகுதி வாய்ந்த பெரியோர்கள் பலர் இந்நாட்டில் இருக்க, என்னை நீங்கள் விரும்பி அழைத்த காரணத்தை நான் நன்கு உணர்வேன். தமிழகத்தின் ஒரு பழம் பதியாகக் கருதப்படும் யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழ் மக்கள் மீது நீங்கள் கொண்டுள்ள அன்பையும் அபிமானத்தையும் என் வாயிலாகக் காட்டுதற்கு இவ்விழா ஒரு வாய்ப்பாக அமைந்தது. தென்னிந்தியத் தமிழர்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் தொன்றுதொட்டுள்ள தொடர்பைச் சில மாதங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாக் கண்கூடாக விளக்கிற்று. தமிழகத்தின் பெருமையை இசைத்துறையில் நிலைநாட்டுதற்கு எழுந்த தமிழிசைச் சங்கமும் இத் தொடர்பை நினைவூட்ட முன்வந்தது யாழ்ப்பாண மக்களுக்குப் பேருவகையைத் தருவதாகும். அவர்களது நன்றியையும் எனது நன்றியையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இசையில் தமிழ் மரபு

தமிழ் வள்ளலாக விளங்கிய இராஜா ஸர் அண்ணாமலைச்செட்டியாரவர்கள் இச் சங்கத்தைத் தொடங்கிய காலத்திலேயே யாழ்ப்பாணமக்கள் இதன் நோக்கத்தை ஆதரித்து இதில் ஈடுபட்டனர். இவ் வியக்கத்துக்கு அடிப்படையாக இருக்கும் உணர்ச்சி யாழ்ப்பாணத்தில் நெடுங்காலமாக வேரூன்றியுள்ளது. இவ் வியக்கம் தோன்றுவதற்கு முன்னரே, யாழ்ப்பாணத்தில் அதிகமாகத் தமிழ்ப் பாட்டுக்களைப் பாடினாலன்றி யாழ்ப்பாண மக்களைத் திருப்திப்படுத்த முடியாதென்று இங்கிருந்து அங்குச் சென்ற சங்கீத வித்துவான்கள் கண்டுகொண்டார்கள். யாழ்ப்பாணத்தில் சங்கீதம் பல நூற்றாண்டுகளாகத் தமிழ் மரபைப் பின்பற்றியதாகவே இருந்து வருகிறது. அங்குள்ள சங்கீதத்தில் வேற்று மொழிக்கலப்பில்லை. யாழ்ப்பாணம என்ற தூய தமிழ்ப் பெயரே தமிழிசையின் பழைய வரலாற்றை இப்பொழுதும் நமக்கு நினைவுறுத்துகிறது. யாழ் என்ற இசைக் கருவியும் பாணர் என்ற இசையாளரும் மறைந்து எவ்வளவோ காலமாயிற்று. ஆயினும் யாழ் வழங்கிய காலத்தையும் அப்பொழுது பாணர் பெற்ற சிறப்பையும் குறிக்கும் சரித்திரச் சின்னமாக யாழ்ப்பாணம் என்ற பெயர் இன்றைய நிலவுகின்றது. யாழ்ப்பாண வைபவமாலை என்ற சரித்திர நூல், யாழ்ப்பாண நாட்டை ஒரு தமிழ்ப்பாணன் இசைப் பரிசாகப் பெற்று ஆண்டான் என்றும், அதனுல் அதற்கு அப் பெயர் வழங்கலாயிற்று என்றும் கூறுகிறது.

யாழ் நாட்டிற் கலை உணர்ச்சி

இக்காலத்தில் யாழைப்பற்றியும் தமிழிசையைப்பற்றியும் நாம் அறிந்துகொள்வதற்கு வழி காட்டிய இரண்டு அறிஞர்கள் யாழ்ப்பாணத்துடன் தொடர்புற்றவர்கள். தமிழகம் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது. கலையறிஞர் என்று உலகெங்கும் புகழ்பெற்ற ஆனந்த குமாரசாமி அவர்கள் அமராவதி என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சிலைகளைக்கொண்டு யாழின் வடிவம் இன்னதென்று முதன்முதலாக வரையறுத்துக் கூறினர். இலங்கைச் சர்வகலாசாலைத் தமிழ்ப் பேராசிரியராயிருந்த விபுலாநந்த அடிகள் அதைப் பின்பற்றி யாழின் அமைப்பை ஆராய்ந்து பண்டைக் காலத்துத் தமிழிசையின் நுட்பங்களை விளக்கி யாழ் நூலை வெளியிட்டனர்.

ஆராய்ச்சிச் சான்றுகள்

தமிழிசையைபபற்றிய ஆராய்ச்சி இன்னும் தொடர்ந்து செய்யப்படவேண்டும். மிகப்பழைய காலத்தில் அக் கலை கடல் கடந்து வேற்றுத் தேசங்களிற் பரவியதென்று கருதுவதற்குச் சான்றுகள் இருக்கின்றன. கிறிஸ்தவ சகாப்தத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியே தமிழர்கள் பாபிலோனியா, எகிப்து யூதேயா முதலிய இடங்களுடன் வாணிபத்தொடர்பு உடையவர்களாயிருந்தார்கள் என்று சரித்திர ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர். இவ் வாணிபத்தின் வாயிலாகத் தமிழ் நாட்டில் வழங்கிய சில இசைக் கருவிகள் பல நாடுகளிற் பரவியிருக்க வேண்டும் என்று நினைப்பதற்கு இடமுண்டு. இதைப்பற்றிய சில ஆராய்ச்சிக் குறிப்புகளை இங்கு வெளியிடுதல் பொருத்தமுடையதென்று கருதுகின்றேன்.

சரித்திர வரலாறு

தமிழர்களின் இசைக் கலையுடன் பூர்வீக எகிப்து நாட்டின் இசைக் கலை நெருங்கிய தொடர்புடையதாகத் தெரிகிறது. மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன் தீப்ஸ் (Thebes) என்ற எகிப்திய நகரத்தில் இருந்த மன்னர்களின் கல்லறைகளில் யாழைப்போன்ற இசைக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ் விசைக் கருவிகள் பெரும்பாலும் ஏழு நரம்புகளுடையன. இருபத்தொரு நரம்புகளையுடைய ஓர் எகிப்திய யாழ் பாரிஸ் நகரத்திலுள்ள பொருட் காட்சிச் சாலையிற் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டிலிருந்த யாழ் வகைகளைப் போல எகிப்திலும் நரம்பு வேறுபாடுடைய யாழ்கள் இருந்தன. தீப்ஸ் நகரத்தில் மூவாயிரம் ஆண்டுகளாகப் புதைபட்டுக்கிடந்த ஒரு யாழில் இசை எழுப்பக்கூடியதாயிருந்தது. பழைய தமிழ் இலக்கியங்களில் யாழ் வர்ணிக்கப்பட்டிருப்பதுபோல, எகிப்திய யாழ்களும் அழகிய கோலம் உடையனவாக அமைக்கப்பட்டுச் சிகப்புத் தோல் உறையால் போர்க்கப்பட்டிருந்தன. தீப்ஸ் மன்னர்களின் கல்லறைகளின் சுவர்களில் ஆண்களும் பெண்களும் யாழை மீட்டி வாசிக்கும் பாவனையில் தீட்டப்பட்ட பல படங்கள் காணப்படுகின்றன. யாழ் வாசிக்கும் ஒருவன் சிகப்புக்கரையுடைய ஓர் ஆடையை உடுத்திருப்பதாகப் படம் வரையப்பட்டிருக்கிறது. பருத்தி நூல் ஆடையில் வர்ணம் தோய்க்கும் கலை புராதனகாலத்தில் தமிழ்நாட்டில்தான் இருந்தது. எகிப்திய மன்னர்கள் உடுத்திருந்த மெல்லிய பருத்தி நூல் ஆடைகள் தமிழகத்திலிருந்தே சென்றன என்று சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். எகிப்திய யாழ்களில் யானைத்

தொடர்ச்சி 2-ம் பக்கம்

உ

பிழைகள் தீரத் தொழுமின் … …

திருச்சிற்றம்பலம்

பிழைகள் தீரத்தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழைகொள் காதன் குழகன்றுறையுமிடம்
மழைகொள் சாலக்கலித்துநீடுயர்வேயவை
குழைகொண்முத்தஞ்சொரியுத்தண்கழுக்குன்றமே,

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையமுந் துயர்தீர்கவே

இந்துசாதனம்

யாழ். கர ௵ மார்கழி ௴
௧௨ வெள்ளிக்கிழமை

புகையிலை விருத்திக்கு வகைதேட விசாரணை

மற்ச மாமிசம் உண்பவர்களையும், மதுபானம் அருந்துபவர்களையும் அப்பாதகச் செய்கைகளினின்றும் காப்பாற்றிவிடவேண்டும் என்னுஞ் சைவக் கொள்கை யுடைய நாம் மாபாதகம் என்ற வகையில் கருதப்படாவிட்டாலும் ஐம் பெரும் ஆகாச் செய்கைகளுக்கு ஒரு உற்சாகங் கூட்டும் உதவிப் பொருளாகவிருக்கின்றதும், உடம்பின் நன்னிலைக்கு இன்னல் விளைவிக்குந் தன்மையினதும் ஆகின்ற புகையிலை விருத்தியைப்பற்றிய விசாரணை செய்பவர்களுக்கு வழி எடுத்துக் காட்டுவது பொருந்தாது எனினும் பொருளாதார முறையில் எங்கள் நாட்டில் விவசாயச் செய்கையை நவமான முறையில் அமைக்கவும் கமக்காரர்களுக்குப் போதிய வருவாயை உண்டு பண்ணவும் வழிவகைகளை எடுத்துக் காட்டுவது எங்கள் கடனாகின்றது.

வெற்றிலைபோன்றுபுகையிலையையும் சிற்றுண்டி வகையில்வைக்கப்படு முணவுப் பொருள்களாகக் கருதி இவ் விலங்கையுள்ளார்மாத்திரமன்று வேறுபல நாட்டவர்களும் அவற்றை உற்பத்தி செய்வதில் வெகு பிரயத்தனமும் கவனமும் எடுத்து வருவது இன்று நேற்றல்ல. முக்கியமாக இப் புகையிலைச் செய்கையால் தமக்கு வேண்டிய பணத்தையும் ஏனைய கிருஷிகச் செய்கையால் உணவுப் பொருள்களையும் கமக்காரர் தேடிக் கொள்வர். இப்பொழுது மலையாளப் புகையிலை வியாபாரம் இந்திய நாட்டு அரசாங்கத்தாரின் கட்டுப்பாடுகளினால் முன்போலப் பெரும்பயன் கொடாதமையானும் 'cigarette' என்னும் வெள்ளைச் சுருட்டுப் பீடி முதலியன ஏராளமாக இறக்குமதி செய்யப்படுவதனாலும் இலங்கையில் புகையிலைச் சுருட்டுத் தொழிலும் பொதுவாகப் போதிய வருவாயைக் கொடுக்காது சீர்குலைந்து வருவதாயிற்று. இந் நிலைமையில் அரசாங்கத்தார் இவற்றையெல்லாம் விசாரணை செய்து புகையிலை விருத்தியையும் சுருட்டுத் தொழில் வியாபாரத்தையும் சீர்படுத்த வழிவகை தேட ஓர் சபையை ஏற்படுத்தி யிருக்கின்றனர். அச்சபைக்கு மலையாளப்புகையிலை வியாபார ஐக்கியசங்கத் தலைவர் திரு. T. C. இராசரத்தினம் அவர்கள் தலைவராக இருக்கின்றார். பல் வேறிடங்களுஞ் சென்று புகையிலை செய்பவர்களையும் சங்கங்களையும் விசாரித்து வருகின்றனர்.

உணவுக்காகும் பொருள் விருத்தியின் அத்தியாவசியகத்தை அவதானித்துக் கொண்டே ஏனைய கிருஷிக விருத்தியைக் கவனிக்க வேண்டுமென்பதை நாம் மறந்து விடக் கூடாது. அகில உலகிலும் உணவுப் பஞ்சம் அளவுகடந்து பரவுகின்றது என்று ஒரே அபாயக் குரலாய் இருக்கின்ற வேளையில், குடிசனப் பெருக்கம் பன்மடங்கு கூடிக்கொண்டு வருங் காலத்தில், அரசாங்கம் முதற்கண் உணவுப் பொருள் விருத்தியையே கண்ணுங்கருத்துமாகக் கவனிக்க வேண்டும். அவசர வேலைகளை விட மற்றும் திட்டங்களுக்கொதுக்கப்பட்ட பணத்தை உணவுப் பொருள் விருத்திக்காகப் போதிய நிலத்தைப் பண்படுத்தவும், நீர்ப்பாய்ச்சலுக்கு வசதிகளை ஆக்கிவைக்கவும் கமக்காரர்களுக்கு ஐக்கிய முறையில் கடன் உதவவும் எடுத்து உபயோகிக்க வேண்டியது அவசியமாகின்றது. புகையிலைச் செய்கையை நட்டமின்றிச்செய்வதற்கும் உற்பத்தியாகின்ற புகையிலையை உள்நாட்டிலேயே உபயோகிக்கத்தக்க சுருட்டுத் தொழிலை ஏற்படுத்தவும், வெள்ளைச்சுருட்டு வியாபாரத்தை அளவுக்குத் தக்கபடி விருத்திசெய்யவும் மட்டுமே இவ் விசாரணைச் சபையார் வழிவகை தேட வேண்டியது என்பதே எங்கள் அபிப்பிராயம்.

கடல் கடந்த கலையின் கவின் சிறப்பு

1-ம் பக்கத் தொடர்ச்சி

தந்த வேலைப்பாடு காணப்படுகின்றது. பழைய காலத்தில் மேற்றிசை நாடுகளுக்கு யானைத் தந்தம் தமிழகத்தினின்றுதான் கிடைத்தது. மேற்கூறிய படங்களில் யாழைத் தவிர, முழவு, குழல், கஞ்சதாளம் முதலிய இசைக்கருவிகளும் வரையப்பட்டிருக்கின்றன. 1823-ஆம் ஆண்டிற் கண் டெடுக்கப்பட்ட ஒரு மிருதங்கம் வார்கட்டியபடியே இருந்தது. இத்தகைய இசைக்கருவிகளின் படங்களைப் பார்க்கும் போது தமிழ்நாட்டின் இசைமரபே நினைவுக்குவருகின்றது. இப் படங்களை விளக்குதற்கு வரையப்பட்டிருக்கும் எகிப்திய சித்திர எழுத்துக்கள் (Hieroglyphs) குருவிகளின் உருவத்தை இசைக்குக் குறியீடாகக் கொண்டுள்ளன. இதைக் காணும்போது தமிழில் முதற் சங்க காலத்தில் இயற்றப்பட்டதாகச் சொல்லப்படும் பெருங்குருகு என்ற இசைத் தமிழ்நூலின் பெயர்ப் பொருத்தம் விளங்குகிறது. தமிழர்களும் புராதனகாலத்தில் சித்திர எழுத்துக்களை வழங்கியிருக்கவேண்டும்.

மேனாட்டில் யாழ் இசை

யூதேயா, அஸ்ஸிரியா முதலிய நாடுகளின் இசைக்கலையும் எகிப்து நாட்டின் இசைக் கலையை ஒத்திருந்ததாகத் தெரிகிறது. எகிப்து நாட்டினின்றே கிரேக்கர்கள் இசைக் கலையைப் பெற்றதாக ஹெரோட்டஸ் (Herodotus) என்ற தொல்லாசிரியர் கூறுகின்றனர். ஐரோப்பிய நாடுகளில் இப்பொழுது காணப்படும் ஹார்ப் (Harp) என்ற இசைக் கருவி எகிப்து நாட்டில் வழங்கிய யாழின் அமைப்பையே அடிப்படையாகக் கொண்டது என்று சொல்லப்படுகிறது. யாழ் என்ற பெயரே ஹார்ப் என்று மருவியிருக்கக்கூடும்.

கி. மு. முதலாவது நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்டிராபோ (Strabo) என்ற கிரேக்க ஆசிரியர் தமது நாட்டுச் சங்கீதம் இந்தியாவுடன் தொடர்புற்றதாகக் கூறுகிறார். இந்தியாவே இசைக் கலைக்குத் தாயகம் என்ற கொள்கை நெடுங்காலமாக இருந்து வருகிறது. ஏறக்குறைய நூறாண்டுகளுக்கு முன் "புராதன ஜாதியார்களின்சங்கீதம்" (The Music of the ancient Nations) என்ற நூல் எழுதிய கார்ல் எங்கெல் (Carl Engel) இக் கொள்கைக்கு ஆதரவு காட்டுகின்றார்.

மிகப் பழைய காலத்தில் இந்திய நாட்டு மக்களுள் தமிழர்களே வெளிநாடுகளுடன் அதிகம் தொடர்புடையவர்களாயிருந்தார்கள். மேற்றிசைநாடுகளைத் தவிர, கீழ்த்திசை நாடுகளிலும் தமிழர்கள் வாணிபம் செய்தனர்; தங்கள் கலையையும் பரவச் செய்தனர்; ஜாவா, பர்மா முதலிய நாடுகளிலும் யாழ் வழங்கி வந்தது. இப்பொழுதும் பர்மாவில் அது சோன் என்ற பெயருடன் காணப்படுகிறது.

எங்கள் நாகரிகத்தின் சேம நிதி

இந்திய நாகரிகத்தின் சிறந்த அம்சங்களாகிய இசை, நாட்டியம், சிற்பம் என்ற கலைகள் இப்பொழுதும் பிராசீன முறையில் தென்னாட்டில்தான் விளங்குகின்றன. இவற்றை எக்காலத்திலும் தளரவிடாது போற்றி வளர்த்தபெருமை தமிழகத்துக்கு உரியதாகும். இக் கலைகளைப்பற்றிய நூல்கள் வடமொழியில் அதிகமாக இருப்பது உண்மையே. தமிழில் இருந்தவை பெரும்பாலும் மறைந்தொழிந்தன. ஆயினும் வடமொழியிலுள்ள நூல்கள் கூறும் நாட்டிய சங்கீத சம்பிரதாயங்கள் இங்கேதான் நடைமுறையிற் காண்கிறோம். அநேக நூற்றாண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட பரதநாட்டியசாத்திரத்திலே தாக்ஷிணாத்யபத்தி என்று தென்னிந்தியக் கலை சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கிறது. சங்கீத ரத்னாகரம் என்ற வடமொழிநூல் தேவாரப் பண் முறையைக் குறிப்பிடுகிறது. தமிழகத்தில் வளர்ந்த கலைகளே இப்பொழுது இந்திய நாகரிகத்தின் சேமநிதியாக இருக்கின்றன என்று கூறலாம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் இசைக்கலை அடைந்திருந்த பெருமையைச் சங்க நூல்களிற் காண்கிறோம். இந் நூல்களில் இசையைப்பற்றியும் இசையாளரைப் பற்றியும் வரும் குறிப்புகள் மிகப் பலவாகும். சங்க காலத்தில் தமிழ் மக்களின் வாழ்க்கையுடன் இசை ஒன்றிக் கலந்திருந்தது என்பது நன்கு விளங்குகிறது. தொல்காப்பியத்தில் காதல் வாழ்க்கையைக் கூறும் அகத்திணைப்பகுதியில் பாணர், தலைவர் தலைவியரின் தூதுவர் ஆகின்றனர். வீரவாழ்க்கையைக் கூறும் புறத்திணைப் பகுதியில் பொருநர் போர்க்களம் பாடு

தொடர்ச்சி 4 - ம்பக்கம்

ஆலய வழிபாடும் இந்து ஆலயச் சட்ட அமைப்பும்

நாவலர் பெருமான் காட்டிய நல்வழி

தோற்றுவாய்

“ஆலய வழிபாடு” என்னும் பொருளில் இந்துசாதனம் முதலிய பத்திரிகைகளிலும், பல மேடைகளிலும் பன்முறை படித்துங் கேட்டுமிருக்கின்றோம். அவற்றைத்தொகுத்தோ விரித்தோ ஈண்டு மீட்டுத் தருதல் எம் கருத்தன்று. இந்து ஆலயச் சட்ட அமைப்புப் பற்றிய கூக்குரல் சாதகமாகவும் பாதகமாகவும் எங்கும் எழுந்து ஒலிக்கின்ற இத்தருணத்தில் ஆலய வழிபாட்டின் உயிர் நாடியாயுள்ள ஒரு சில உறுப்புக்களை எடுத்துக் காட்டி அவற்றின் உட்பொருள் இந்து ஆலயச் சட்ட அமைப்பில் இன்றியமையாது இடம் பெற வேண்டுமென்பதையுங் காட்டுதலே எமது நோக்கம். நாவலர்பெருமான் கவின்ற பொன்மொழிகள் இதற்கு நல்ல ஆதாரமாயமைகின்றனவாகலின் அவற்றை இந்த ஆலயச் சட்டம் அமைப்போருக்கு நாம் எடுத்துக்காட்டுவோம்.

ஆலயம் பேரின்பந் தருவது

ஆணவ இருள் என்று சொல்லப்படுகின்ற அஞ்ஞானத்துக்கேதுவாகிய அப்பொருளுடன் இருள் மயமாய்ப் பிரிப்பின்றி நின்ற ஆன்மாவானது ஒளிபெறும்பொருட்டுத் தனு, கரண, புவன போகங்களை இறைவன் ஈந்தருளினர். “விடிவாமளவும் விளக்கனையமாயை வடிவாதி கன்மத்து வந்து” (திருவருட்பயன்) இதனை விளக்குகின்றது. ஆனால் இவ்வுடலைப் பெற்ற ஆன்மாக்களாகிய நாம் மெய், வாய், கண், மூக்குச், செவி முதலிய இந்திரியங்களுடன் சிவிக்கும்பொழுது உலகப்பொருட்களை உறுதிபயப்பனவென்று நினைத்து அவற்றைப் பெறுதலிலேயே எம் வாணாளைக் கழிக்கிறோம். உலகப் பொருட்களில் ஆசை அளவின்றிப் பெருகப்பெருக அதற்கேற்றவாறு ஆன்ம அறிவு விரிந்து படர்கின்றது. இவ்வாறு மாயைப் பொருட்களில்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

வாழ்க்கை வானில்

வளர்மதி

* * எங்கேயாவது ஈட்டுக்குப் பணம் எடுக்கலாம் என்று அலைந்து திரிந்துவிட்டு வரும்பொழுது திரு. பொதுசனம் அவர்கள் ஒரு சுருட்டுப் பிடித்துத் துயரத் தீர்க்க எண்ணினார். பாவம்! சுருட்டை எடுத்தார்! அலைத்து மறுபடியுஞ் சுருட்டினார். வழியில் வந்தவனிடம் நெருப்புப்பெட்டி தரும்படி சைகையாற் கேட்டார். நெருப்புப் பெட்டியா? 'அந்தச் சமானதானே இந்த ஊரில் இல்லையாமே' என்று மறுமொழி வந்தது. எட்டி நடந்தார். எதிரேயுள்ள கடையில்போய் ஒரு பெட்டியெடுக்கக்கூடாதா? என்றார். என்ன இந்த ஊருக்குப் புதிதோ?!! என்றார் வியாபாரியார். ஆத்திரம் கூடினது. வீடுவந்து சேர்ந்தார். இங்கேயாரும் அந்த நெருப்புப் பெட்டியைக் கொண்டாரும்! என்றார். எந்த நெருப்புப்பெட்டி? அதுதானே காலையிலே கடைசிக் குச்சு என்று தட்டிப்போட்டு இப்போது கேட்கிறீர்களே? என்று மனைவி ஆச்சரியத்தோடுசொன்னார். அடுப்பில் நெருப்பாவது கொண்டுவா என்றதும அதற்குத்தானே நானும் உங்களை இவ்வளவுநேரமாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்! என்றாள் மனைவி. இவ்வளவில் திரு. பொதுசனத்திற்குப் பொங்கிவிட்டது.

x x x

இன்று நெருப்பு மூட்ட வேண்டாம்! இப்போதே மூண்டுவிட்டது!! அப்பக்காரனிடம் அப்பம் வாங்கு. சம்பலும் ஆக்கினால் போதும்!!! அவ்வளவுதான். என்றுசொல்லிக்கொண்டு திருவாளர் பொதுசனம் ஈட்டுக்குப் பணம் கிடைக்கவில்லையென்ற கவலையைச் சமாளிக்கச் சுருட்டை வாயில் வைப்பதும் எடுப்பதுமாய் இருக்கும் வேளையில் சம்பல் என்றால் என்ன சும்மாவோ? தேங்காயில்லை, வெங்காயமில்லை, செய்கிறதென்ன என்றாளவள்! அடக்கின கோபம் வெடித்தது!!

x x x

இன்னும் என்ன நாலைந்து மாதங்கள்தானே! வாக்குக்கு வருகிறவேளை பார்த்துக்கொள்ளுகிறேன்!! வட்டி கூடினாலும் ஈடுவைப்பதுதான். இந்த ஈட்டை முதலும் வட்டியுங் கொடுத்து மீண்டாற்சரி அல்லது ஒரு பிளைக்கும் வாக்குக்கொடுக்க மாட்டேன்.

x x x

என்று திரு. பொதுசனம் சொல்லி முடியவில்லை அடுத்த வீட்டுக்காரர் வந்துசேர்ந்தார்; நல்லாயிருக்குதுகாணும் காரியம். மனிதன் சுருட்டுக்கூடப் புகைக்க முடியாமல் இருக்கிறது. இந்தக் கொழும்புச் சங்கத்திற்கு என்ன வேலைக்கு இவர்கள் போனவை என்று மறுபடி திரு. பொதுசனம் தொடங்கினார். அடுத்த வீட்டுப் பேர்வழி விட்டுக் கொடுக்கவில்லை. சும்மா சொல்லுகிறது தான். அரசாங்கந்தான் என்ன செய்யும். நெருப்புப் பெட்டி செய்யச் செய்யக் காணாமற் போனால் அவையிலே பிழை சொல்லக் கூடாது; நான் நாளைக்கு பெண்சாதி வீட்டுக்குப் போக ஆயத்தம். வீடுவிற்றுப் போட்டேன் என்று சொன்னது திரு. பொதுசனத்திற்கு ஆச்சரியம் விளைத்தது. என்ன விஷயம் எங்கள் இந்தக் கிராம முன்னேற்றச் சங்கம் இருக்கிறதே வீடுகட்டக் கிணறு வெட்டப் பணம் கொடுக்கப் போகிறதாம்! வீடில்லாவிட்டால் வீடுகட்டிக் கொடுக்குமாம்!! நான் வீட்டைப் பிடுங்கி விற்றுவிட்டுப் பிறகு அந்தச் சங்கத்திலே பேசிப் பணம் வாங்கி வீடு கட்டப்போகிறேன்!!! என்றார்.

x x x

பார்த்தீர்களா, அரசாங்கம் இந்த வீட்டிற்கு தவாது அடுத்த வீட்டிற்கு அது உதவத்தக்கதாயிருக்கின்றது! வாழ்க்கைச் சித்திரம் நன்றாயிருக்கிறது.

கலாஜோதி வாசகசாலை புதுக்கட்டடத் திறப்பு

தட்டாதெருச் சந்தியில் அமைந்துள்ள பூந்தோட்ட மைதானத்தில் சென்றவாரம் ஆங்குள்ள வாலிபரது முயற்சியால் உருவாக்கப்பட்ட புதிய கட்டடம் வாசகசாலையாக்கப் பட்டது. திரு. S. பதஞ்சலி (பிறக்டர்) அவர்கள் வாசகசாலையைத் திறந்து வைத்தார்.

திருவாளர்கள். A. வைத்தியலிங்கம் B. A., B. sc. ஆ. துரைராசசிங்கம் M.M.C, க. குகதாசன் M. M. C., V. பொன்னுத்துரை, M. கார்த்திகேசன் B. A., புதுமைலோலன், இளங்கீரன், V. A. கந்தசாமி, A. அமிர்தலிங்கம் B. A., K. துரைசிங்கம் M. M. C., நா. சுப்பிரமணியம் என்னும் பலர் பேசினர். "புதுமைலோலன்" அவர்களின் நன்றியுரையுடன் இனிதே விழா நிறைவெய்தியது.

வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலை

இங்குள்ள சிரேஷ்ட, கனிஷ்ட (S. S. C ; J. S. C) வகுப்புக்களிற் சேர விரும்பும் மாணவர்கள் *10—1—52* — க்கு முன் தலைமையாசிரியருக்கு விண்ணப்பித்துக்கொள்ளவும். தெரிவுப் பரீட்சையில் தேறுவோர் அநுமதிக்கப் பெறுவர் விண்ணப்ப மாதிரிப் பத்திரம் தலைமையாசிரியரிடத்துப் பெறலாம்.

வித்துவான்,
ந. சுப்பையபிள்ளை
தலைமையாசிரியர், *26-12-51*
(M. 165- 28, 1-1-52.)

ஆலய வழிபாடும் இந்து ஆலயச் சட்ட அமைப்பும்

2-ம் பக்கத் தொடர்ச்சி

நாம் மயங்குகின்றோம். இந்த மயக்கத்தை நீக்கவே ஆலயம் எழுந்தது. (ஆ + லயம் = ஆன்மா + ஒடுங்குதல்) புறப்பொருட்களிலேவிரிந்து படர்ந்த ஆன்ம அறிவு, இங்கே அகமுகமாகி உயிர்க்குயிராகிய பதிப்பொருளில், ஒடுங்கிப்படுகின்றது. இதுவே பேரின்பவழி. இவ்வாறு ஆலயவழிபாடாற்றாதார் மக்கட்பிறவியின் பயனைப் பெறமாட்டார். அன்னவர் வாழும் நாட்டில் ஆலயம் இருக்கமாட்டாது. இருந்தாலும் ஆதரிப்பாரின்றி அழிந்தொழிதல் நிச்சயம். எனவே காடெனப்படுவது மக்கட்பண்பினர் வாழ்தல் இன்மையால் மாக்கள்வாழ் காடாகின்றது. இதை வலியுறுத்தவே "திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்...அடவி காடே" "ஆக்கையாற்பயனென் அரன் கோயில் வலம்வந்து பூக்கையாலட்டிப் போற்றி என்னாத இவ்வாக்கையாற் பயனென்" என்னுந் தேவாரத்திருமொழிகள் எழுந்தன

சிவசோதி
... எழுதுவது ....

ஆலயம் இகபர இன்பம் இரண்டுந் தருவது

ஆலயம் பேரின்ப வழியென்றோம். பேரின்ப வழியாதல் எவ்வாறெனிற் கூறுதும். பெற்றோர் ஆசிரியர் முதலியோர், இளஞ்சிறுருக்குத் தீம்பண்டங்களைக் கொடுத்து இன்பம் பயப்பித்து அவர்களுக்கு உறுதிதருவனவற்றைச் செய்ய ஊக்குவிப்பதுபோல் மக்களாகிய நாம ஆலயத்துக்குச் சென்று மனத்தை ஒடுக்கி வழிபட எமக்கு இகத்தில் வேண்டியவற்றைத்தந்து அவ்வித வழிபாட்டில் விருப்புண்டாகுமாறு அருள்புரிகின்றது பரசிவப் பொருள் இவ்வித வழிபாட்டு முதிர்ச்சியால் புறத்தேயுள்ள பொருட் செல்வத்தின் இழிவையுணர்ந்து அகத்தேயுள்ள அருட்செல்வத்தை நாடுகின்றது ஆன்மா "அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் — பொருட் செல்வம் பூரியார் கண்ணுமுள" என்ற உணரப்பெறுதலின.

ஆலயம் அருளுருவம்

கல்லாலும் செம்பாலும் ஆக்கப்பெற்ற ஒன்று இகபர இன்பத்தரும் ஆற்றல் வாய்ந்திருப்பது எங்ஙனம் என்னும் ஐயவினா எழுகின்றது இது வெறும் சடப்பொருளன்று. உயிர்க்குயிராகிய இறைவன் ஆன்மாக்களின் பொருட்டு எழுந்தருளியிருந்து அருள்புரியுந் திருவுருவமாகும். சரியையாளருக்கு இவ்வாறு தூலமாயும், கிரியையாளர் யோகிகளுக்குச் சூக்குமமாயும் அதிசூக்குமமாயும் நின்று அவரவருக்கு வேண்டியவாறருள் புரிந்து ஞானிகளுக்கு அறிவுருவமாயெழுந்தருளிநின்று பசுவின் தேகத்திற் செறிந்திருக்கும் பாலானது கன்று ஊட்டும் பொழுது முலையில் வருவதுபோல் உலகெங்கும் வியாபித்து நிற்கும் இறைவன் அருள் புரியும் "திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனிதன்னைச் சிவனெனவே கண்டவர்க்குச் சிவன் உறைவன் அங்கே ... சுரபிக்கெங்கும் உருக்காணவொண்ணாத பால் முலைப்பால் விம்மி ஒழுகுவதுபோல் வெளிப்பட்டருளுவன் அன்பர்க்கே" என்னுஞ் சிவஞானசித்திச் செய்யுள் இதனை விளக்குகின்றது.

நாவலர் பெருமான் காட்டிய நல்வழி

ஆலயம் இத்தன்மைத்து என்று மேலே கூறியவாறு அறியும்பான்மையரே ஆலயத்தொடர்பில் எவ்விததொண்டும் ஆற்றுதற்குரியவர். நாவலர்பெருமான் கருத்தும் இதற்குடன்பாடாயிருக்கின்றது. "மனக் குற்றங்களும் உடற்குற்றங்களும் இல்லாதவர்களாய்...சைவாகமங்களையும் சிவபுராணங்களையுங் கற்றறிந்தவர்களாய், சிவபத்திமான்களாய் உள்ள சைவர்களே திருக்கோயிலை நடத்துதற்கு அதிகாரிகளாவர்" (ஆலய தரிசனவிதி) என அவர் நவின்ற மொழிகள் இந்து ஆலயச்சட்டம் அமைப்போருக்கு நல்ல வழிகாட்டியாயமையும்.

எனவே இந்து ஆலயச்சட்ட பரிபாலனத்தில் ஈடுபடும் மந்திரி, காரியாதிகாரி (commissioner) ஆலய பரிபாலனசபை அங்கத்தவர் ஆகிய யாவரும் மேலே கூறிப்போந்த இலக்கணம் உடையராகவே வேண்டும்.

தேர்தல்முறை இன்றியமையாதது

ஆனால் எங்கள் அரசாங்க அமைப்பின்படி இந்த இலக்கணங்களையுடையவரே எப்பொழுதும் மந்திரியாகமாட்டார். இந்த இலக்கணங்களில்லாத ஒரு மந்திரி இந்த இலக்கணங்களமைந்த காரியாதிகாரியை அல்லது ஆலயபரிபாலன சபை அங்கத்தவர்களைத் தெரிவுசெய்ய எவ்வாற்றானும் முடியாது. அப்படித் தெரிவுசெய்யின் இப்போ அரசாங்கபரிபாலனத்திலுண்டாகும் லஞ்சம் முதலிய ஊழல்களே ஆலயபரிபாலனத்திலுமுண்டாவது திண்ணம்,

ஆகையினாலே ஆலயபரிபாலன சபை அங்கத்தவர்கள் மேலேகூறிய இலக்கணங்களுடையராதலோடு ஆலயவழிபாடு செய்பவர்களாலேயே தெரிவு செய்யப்படுதலும் வேண்டும். குறித்த அங்கத்தவர்களுடைய ஆலோசனையைப் பெற்று அந்தச் சபையின் தலைவராகின்ற காரியாதிகாரியைநியமித்தல் வேண்டும். மந்திரிக்கு மேற்பார்வை அதிகாரம்மாத்திரமேயிருத்தல் முறையாகும். இதுவே நாவலர் பெருமான் காட்டிய நலவழியின்பாற்படும். எனவே இந்து ஆலயச்சட்ட அமைப்பில் எவ்விதமாயினும் ஈடுபடும் ஒவ்வொருவரும் இவற்றை உள்ளத்திருத்தி ஆவனபுரிதல் இன்றியமையா இருக்கடனாகின்றது

திருவாதவூரர் புராண படனம்

நிகழும் கர ௵ மார்கழி ௴ ௧௮ ௳ (2-1-52) புதன் கிழமை தொடக்கம் ௨௭ ௳ (11-1-52) வெள்ளிக் கிழமை வரையும் திருவெம்பாவைக் காலமாதலால் தினமும் காலை 7 மணிமுதல் திருவெம்பாவைப் பூசையும் திருவாதவூரர் புராணபடனமும் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை யாதரவில் ஷை சபையினது சைவாச்சிரம நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

சைவாபிமானிகள் சமுகந் தந்து கேட்டின்புறுவார்களாக

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
27-11-51
M 167

தீப்பெட்டி

தீப்பெட்டி நெருக்கடியைத் தீர்ப்பதற்குக் கைத்தொழிற் பகுதி உதவி அதிகாரி தகுந்த நடவடிக்கை எடுத்திருக்கிறார். இதனால் மறைந்திருந்த தீப்பெட்டிகள் வெளியே வருகின்றன.

காலத்தின் கோலம்

டாக்கா வைத்திய கல்லூரி வைத்திய நிலையத்தில் பதினொரு வயசுப் பெண் ஒரு மகவைப் பெற்றதாகவும் அது பெரும் புதினமாக இருப்பதாகவும் இந்திய பத்திரிகை ஒன்று கூறுகின்றது. என்னே! காலத்தின் கோலம்.

உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன்
கணிப்பது.

எங்கள் சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 30—12—51——5—1—52

மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இந்த வாரம் சில பிழையான விளக்கந் தெளிவாகும். ஆனால் குடும்பசமாதானமிராது. செலவதிகரிக்கும். வாரஇறுதியில் தப்பன் வழி இனத்தவரிலிருந்து சந்தோஷமான புதினம் வரும்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

புது வருடம் சில சந்தோஷமான புதினங்களைக்கொண்டுவரும் புதுப் பொறுப் பேற்கவேண்டி வரும். நண்பருதவி அதிகமுண்டு. காத்திராதலாபமும் வரக்கூடும்

மிதுனராசி மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

வாரத்தின் முதல் இரண்டு நாளும் கவனமாய்க் கழிக்கவேண்டும். நண்பருடன் திருத்தவீனத்துக்கும் மானபங்கத்துக்குமிட முண்டு. சில சந்தோஷமான புதினம் புதுவருடப் பிற்பகலில் வரும். எதிரிகளுக்கழிவும் இனத்தவரால் இன்பமும் வரும்.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

வாரத்தின் முதல் இரண்டு நாளும் புது முயற்சிகளுக்கு உபயோகப்படுத்தலாம். விசேஷ கருமங்களுக்குப் புதுவருட நாளும் அடுத்த நாளுந் தவிர்க்க வேண்டும். வார மிகுதி நன்மையாயிருக்கும். ஆனாற் செலவுக்கிடமுண்டு.

சிங்கராசி மகம், பூரம், உத்தரம், 1ம் பாதம்.

வாரத்தின் முதல் அரைப்பங்கு வியாபாரத்துக்கு நல்லது. வியாழன், வெள்ளியும் சனி காலையுந் தொந்தரவாயிருக்கும். இந்த வாரம் ஒன்றும் வேகமாய்த் தொடங்கக் கூடாது.

கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

வாரமுற்பகுதி சந்தோஷமான அதிசயமாயிருக்கும். புதுமுயற்சியில் அநுகூலத்துக்கும் நண்பருதவிக்கும் இடமுண்டு. வாரஇறுதிக்கு முன் சில விசேஷதீர்மானஞ் செய்யவேண்டிவரும்.

துலாம் சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

விசேஷ முயற்சிகள் சிறிது காலத்துக்குப்பின்போடவேண்டும். ஆனால் பொதுவான கருமங்களுக்கு நல்லகாலம். செலவதிகரிக்கும். சுற்றில் துன்பப்பட இடமுண்டு. மவுனமாயிருத்தல் நன்று.

விருச்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

இந்த வாரம் பணப்பேறு நிச்சயம். பெண் சிநேகிதரால் அதிக உதவியுண்டு. துணிந்த செயலில் வெற்றிக்கும் எதிரிகளுக் கழிவுக்கு மிடமுண்டு.

தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

முந்தின வாரம் கடனுக்கொடுத்த பணத்திலொருபகுதி திருப்பி வாங்கக்கூடும். குடும்ப சமாதானமுண்டு. புதுக் கருமங்களில் முன்னேறுக. கடனிருந்தால், பெரும்பகுதி நீக்கக்கூடியதாயிருக்கும்.

மகரராசி உத்தராடம் 2,3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

இந்தவாரம் சொந்தக் காரியம் சில பிழையாகக்கூடும். அதிக முயற்சியுண்டு. ஆனால் அதிக லாபமில்லை வாரஇறுதியில் போட்டிகளில் வெற்றியும் பேரும் உண்டாகும்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

இந்தவாரம் குடும்பத் தொடர்பு நல்லாயமைக்கவேண்டியது அவசியம். அவதானமாயிராவிட்டால் சண்டைகளுக்கும்பிரிவுகளுக்குமிடமுண்டு, பண நெருக்கடிக்குமிடமுண்டு, வார இறுதியில் பல கஷ்டங்கள் நீங்கும்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

புதிதாய்த் தொடங்குகிற எதற்கும் மிகச் சிறந்த காலம். புது முயற்சிவழியிற் பணந் தேடலாம். புது நட்புப்பின்னுக்கு அதிக உதவியாயிருக்கும்.

கண்டனக் கட்சிகளின் - - கதம்பக் கச்சேரி

1-ம் பக்கத் தொடர்ச்சி

அடுத்தபடியாகத் திரு S. நடேசபிள்ளை அவர்கள் பேச ஆரம்பிக்கும்பொழுதே ஆச்சரியக் குறிப்புக் காட்டினார். புகழ் உரைக்க வந்தவர்கள் போர்க்கோலங் கொண்டதேனோ? என்று வியப்படைந்தனர். வந்த விஷயத்தைத் திரு செல்வநாயகம்பேரின்பநாயகம் போன்ற செவ்வனே செய்துவிட்டு அரசியற் பேச்சை அடுத்ததேர்தலிற் பார்த்துக் கொள்வோம் என்று சொல்லி முடித்தார்.

திருவாளர் C. பொன்னம்பலம் கண்டனப் பாட்டைப் பாடிக்கொண்டே தொடங்கினார். ஐக்கிய தேசியக் கட்சிக்கு அணித்தாக உள்ளவர் என்று ஆரம்பித்தார். ஒரு கட்சியிலும் இல்லை என்று பேசி முடித்தார். திரு. D. S. சேனநாயகவுக்கும் திரு. G. G. பொன்னம்பலத்திற்கும் நாக்கு இடங் கொடுக்கும் வரையில தாக்கினார். திரு. நாகலிங்கத்தை விட்டாரா — மலசலகூடத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தைத் தான் முறியடித்தாரென்றும் தொழிற்கட்சித் தலைவர்கள் எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்றும் கூறி, ஒருவாறு பேசிமுடித்தார்.

திரு. T. ருத்திரா திரு. Reggie பெரேரா பேசியபின்பு சமசமாஜக் கட்சித் தலைவர் Dr. N. M. பெரேரா திரு. நாகலிங்கத்தின் வெற்றியின் விருத்தாந்தத்தையும் அதன் தாற்பரியத்தையும் எடுத்துக் காட்டித் தமது கட்சியின் நோக்கங்களை விளக்கப்படுத்தினார். Dr. Colvin R. de சில்வா அரசியல விவாதத்தை இழுத்துவிட்ட திரு. சுந்தரலிங்கம் அவர்களுக்குத் தக்க பதில் இறுத்து சேனநாயக அரசாங்கத்தைச் சிதைத்து விட வாருங்கள் செகத்தீரே என்று அறைகூவி அழைத்தார். திரு. நாகலிங்கம் நன்றி கூறி முடித்தனர்.

கடல் கடந்த கலையின் கவின் சிறப்பு

2-ம் பக்கத்தொடர்ச்சி

கின்றனர். குறிஞ்சி முதலிய திணைகளுக்கு யாழும் பறையும் கருப்பொருளாகின்றன. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்ற இலக்கியங்களில் பாணரும், பொருநரும், விறலியரும், கூத்தரும் பரிசில் வாழ்க்கையராய் அரசரிடமும் குறுநில மன்னரிடமும் சென்று பல வரிசைகள் பெறுவது சித்தரிக்கப்படுகிறது. முத்தமிழ் இலக்கியமாகிய சிலப்பதிகாரத்தில் இசைக்கலை தமிழ் நாகரித்தின் "செம்பாதியன்று, பெரிது" என்பது வெளிப்படையாகின்றது. பழைய தமிழிசைப் பாட்டுக்கள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை இக் காப்பியத்திற் காணலாம். கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை என்ற பகுதிகளில் வரும் இசைப்பாடல்கள் நமது செஞ்சை அள்ளி இன்பச் சுவை தருகின்றன. இக்காப்பியத்திலுள்ள அரங்கேற்று காதை இசை நாட்டியக் கலைகளின் கருவூலமாகும். இந் நூல்களிலிருந்து சங்க காலத்தில் தமிழகம் இசைமயமாக இருந்ததைக் காண்கிறோம்.

தெய்விகச் சக்தி

இதன்பிறகு தமிழிசை உச்சநிலை அடைந்தகாலம் தேவார திருவாசகமும், திருவாய்மொழி முதலிய திவ்யப் பிரபந்தங்களும் தோன்றிய காலமாகும். இக்காலப் பகுதியில் தமிழிசை தெய்விக சக்தியைப் பெற்று விளங்குகிறது. பக்தி இயக்கம் தமிழ்நாடெங்கும் பரவுகின்றது. திருஞானசம்பந்தர் தாளத்தை வைத்துக்கொண்டு பாடுகிறார்; திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழைமீட்டி வாசிக்கின்றார்.

பண்ணும்பத மேழும்பல
  வோசைத்தமி ழவையும்
உண்ணின்றதொர் சுவையுமுறு
  தாளத்தொலி பலவும்
மண்ணும்புன லுயிரும்வரு
  காற்றுஞ்சுடர் மூன்றும்
விண்ணும்முழு தானானிடம்
  வீழிம்மிழ லையே.

என்று திருஞானசம்பந்தர் பாடும்போது பத்தியும் இசையும் ஒன்றாய் விடுகின்றன.

இந்த இயக்கம் தமிழ்மக்களின் சரித்திரத்தில் ஓர் ஒப்பற்ற நிகழ்ச்சியாகும். இதன் சக்தி பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் நிலைபெற்றுள்ளது. இந்தக் காலத்தில் எழுந்த பத்திப்பாடல்கள் மக்களுக்குப் புத்துணர்ச்சியைக் கொடுத்தன. அவற்றின் இசை முழக்கம் ஊரெங்கும் நாடெங்கும் கேட்டது. காத்தாரம் இசையமைத்தக் காரிகையார் பண்பாடும் கவிஞர் வீதி என்று தேவாரம் இதை வர்ணிக்கின்றது.

சைவ மன்னனின் தொண்டு

தேவாரப் பண்கள் சென்ற ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழகம் எங்கும் ஓதப்பட்டு வருகின்றன. அவை மறைந்துபோகாமல் அவற்றைப் பாதுகாத்து நிலை நிறுத்திய பெருமை சோழர் குலத்தில் உதித்துத் தன் ஆதிக்கத்தைத் தமிழகத்துக்கு அப்பாற் பரப்பிய முதலாம் இராஜராஜன் என்னும் சைவ மன்னனைச் சாரும். அவன் தேவாரப் பதிகங்களுக்குரிய பண்களை வகுக்கச் செய்து அப்பண்களைத் திருக்கோயில்களில் ஓதும்படி பல நிபந்தங்களை அமைத்தான். அக்காலத்திலிருந்து தேவாரப் பதிகங்கள் தமிழிசை மரபின் நிலைக்களமாக இருக்கின்றன. திருவாய்மொழிக்கும் திருவிசைப்பாவுக்கும் பண்கள் வகுக்கப்பட்டிருப்பினும், அப்பாசுரங்களை அவற்றிற்குரிய பண்களுடன் ஓதுவது வழக்கத்தில் இல்லாமற் போயிற்று.

அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ், திருவகுப்பு என்ற பாக்களிற் பக்தியும் இசையும் கலந்துள்ளன. அவை வண்ணம் என்ற தமிழிசை வகையைச் சேர்ந்தவை. தாளகதியிற் சிறந்தன. அருணகிரிநாதர் காலம்வரையிற் சில இசை நூல்கள் தமிழ்மொழியில் எஞ்சியிருந்தன என்று தெரிகிறது. பரிமேலழகர், நச்சினார்க்கினியர், சிலப்பதிகார அரும்பத ஆசிரியர், அடியார்க்கு நல்லார் முதலிய உரையாசிரியர்கள் இசைத் தமிழறிவு படைத்தவர்களாயிருந்தார்கள்.

இவர்கள் காலத்துக்குப் பிறகு தமிழகம் விஜயநகர மன்னர்களின் ஆதிக்கத்துக்குட்பட்டது. தெலுங்குமொழி அரசவையில் செல்வாக்குப் பெற்றது. தமிழகத்தில் வழங்கிய இசைமரபு கருநாடக சங்கீதம் என மருவியது. தமிழில் இருந்த இசைநூல்கள் மறைந்துபோயின.

ஆனால் தமிழிசை மறையவில்லை. சிந்து, தெம்மாங்கு முதலிய இசைவகைகளும், குறவஞ்சி, பள்ளு முதலிய இசைநாடகங்களும் பரவத் தலைப்பட்டன. குற்றாலக்குறவஞ்சியும், முக்கூடற்பள்ளு நாடகமும் இவ்வகையிற் சிறந்தன. அருணாசலக் கவிராயர் இயற்றிய இராம நாடகம் போன்ற பல நாடகங்கள் வெளிவரலாயின. கீர்த்தனைகள், பதங்கள் என்ற இசைப்பாட்டுகள் தமிழில் இயற்றப்பட்டன. கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையும், முத்துத்தாண்டவர் பதமும் இவற்றிற்குச் சிறந்த உதாரணங்களாகும்.

கருநாடக சங்கீத காலம்

பழைய காலத்தில் சோழ மன்னர்களுக்குத் தலைநகரா யிருந்த தஞ்சை, விஜயநகர நாயக்கர்கள் காலத்தில் சங்கீத பீடமாய் விளங்கிற்று. இங்கு ஆண்ட நாயக்கர்களிற் சிலர் சங்கீத விற்பன்னராய் இருந்தனர். இவர்கள் காலத்தில் கருநாடகசங்கீதம் வளர்ச்சியுற்றது. வேங்கடமகியின் மேளகர்த்தா ராகமுறை அமைக்கப்பட்டது. இவர்கள் அவையில் தெலுங்குக் கீர்த்தனைகளும் பதங்களும் அதிகமாக இயற்றப்பட்டன. நாயக்க வம்சம் குலைந்துபோய், மராட்டிய மன்னர்கள் ஆண்ட காலத்திலும் தெலுங்கு மொழியே சங்கீதத்துக்கு ஏற்றதாகக் கருதப்பட்டது மராட்டிய மன்னர்கள் காலத்தில் வாழ்ந்த தியாகையர், சியாமாசாஸ்திரி முதலிய சங்கீத மூர்த்திகள் தங்களது அமுத கானத்தைத் தெலுங்கு மொழியில் உருவாக்கினர். அவர்களது கீர்த்தனைகள் தெலுங்கில் இருந்தாலும் தமிழ்நாட்டின் சங்கீதப் பெருமையைக் காட்டுகின்றன.

அக்கீர்த்தனைகள் தமிழ்மக்களால் போற்றப்படுதற்குரியன. அவை தமிழிசை வளர்ச்சிக்குப் பயன்படக்கூடியவை. தெலுங்கு தமிழோடியைந்த திராவிடமொழியே; இருமொழிக்கும் சங்கீத மரபு ஒன்றேயாகும். ஆனால் தமிழ்மொழி வாயிலாகவே தமிழகத்தில் இசை வளரக்கூடும் என்பதைத் தமிழகத்திற் பிறந்த எவரும் மறக்கவொண்ணாது. இதைச் சமீப காலத்தில் சிலர் மறக்க நேர்ந்தது விந்தையாகும். சங்கீத வித்துவான்கள் தெலுங்குக் கீர்த்தனைகளையே பாடிக்கொண்டிருந்தால், தமிழகத்தின் சங்கீத வளர்ச்சி குன்றிவிடும் என்பதைச் சில தமிழ்ப் பெரியார்கள் உணர்ந்து, தமிழிசைப் பாட்டுகளுக்கு முதன்மை கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் தக்க தருணத்தில் தமிழிசை இயக்கத்தை ஆரம்பித்தனர். அதனால் விளைந்த நற்பயனை இப்பொழுது யார்தான் மறுக்கக்கூடும்?

முத்தமிழ் முழக்கம் பிறந்துவிட்டது

தமிழிசைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் தமிழிசை புத்துயிர் பெற்றிருக்கின்றது. சங்கீத வித்துவான்கள் தங்கள் இசையாற்றலைத் தமிழ்ப் பாட்டுகள் வாயிலாகக் காட்டுகின்றனர். பழைய தமிழ் உருப்படிகள் புதிய மெருகு பெறுகின்றன. புத்தம் புதிய இசைப் பாடல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. தமிழிசையாராய்ச்சி வலுப்படுகின்றது. தமிழிசை நாடகங்கள் ஆங்காங்கு அரங்கேற்றப்படுகின்றன. முத்தமிழ் முழக்கத்தை மீண்டும் தமிழகத்திற் கேட்குங்காலம் பிறந்துவிட்டது.

தமிழிசைச் சங்கம் ஆற்ற வேண்டிய இரு பணிகள்

தமிழிசைச் சங்கம் இனிச் செய்தற்குரிய பணிகள் இரண்டு இருக்கின்றன, அவற்றைச் சங்கத்தினர் நன்கு அறிவார்கள், இப்போவையில் அவற்றைக் குறிப்பிடுவது எனது கடமையென்று கருதுகிறேன்.

அவற்றுள் ஒன்று நாடகக்கலையைப்பற்றியதாகும். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ்ப் பாகுபாட்டில் இசை நடு நாயகமாக இருக்கின்றது. இசைத்தமிழ் இயற்றமிழினின்றும், நாடகத் தமிழினின்றும் பிரிக்கப்படாத வகையில் கலப்புற்றிருக்கின்றது. தமிழ் நாடகங்கள் பழைய காலந்தொட்டு இசைப்பகுதி மிகுந்தனவாக உள்ளன. இவற்றின் வழியாகவே தமிழ் மக்களிற் பெரும்பாலோர் இசையின்பத்தை நுகர்ந்து வந்தனர். சினிமா என்கிற நவீன நாடகத் துறையில் பல ஆண்டுகளாகத் தமிழ்ப் பாட்டுகள் தமிழ் மரபிற்கேற்ற இராகங்களிற் பாடப்பட்டு வந்தன. ஆனால் இப்பொழுது தமிழ்ப் பாட்டுகளை இம்முறையாகப் பாடும் வழக்கமே அற்றுப் போகும் நிலையில் இருக்கிறது. தமிழ் மொழிக்குப் பொருந்தாத வகையில் ஹிந்துஸ்தானி மெட்டுகள் புகுத்தப்படுகின்றன. ஹிந்துஸ்தானி சங்கீதம் வட இந்தியமொழிகளுக்கு இயைபுடையது; தமிழ் மொழிக்கு அதிகம் இயைபு இல்லாதது. ஹிந்துஸ்தானி சங்கீதத்தை ஒரு சிறிதும் இழித்துக் கூறுவது எனது நோக்கமன்று. உயர்ந்த ஹிந்துஸ்தானி சங்கீதத்தைக் கேட்டு நான் இன்புற்றிருக்கிறேன் ஆனால் தமிழ்ப்படங்களில் கேட்கும் ஹிந்துஸ்தானி சங்கீதம் இவ்வகையைச் சேர்ந்ததன்று. ஹிந்துஸ்தானி இராகங்களிற் தமிழுக்குப் பொருத்தமானவற்றை எமதேசத்தில் உபயோகப்படுத்துவது குறையாகாது. வேற்று நாடுகளில் இழிசனர் உவக்கும் கூத்துக்களும் தமிழ்ப் படங்களில் சங்கீதமாகப் புகுத்தப்படுகின்றன. இதனால் தமிழ் மக்களின் சங்கீத உணர்ச்சி நாளடைவில் கெட்டுப் போகும் என்று கவலையுறுதற் கிடமிருக்கின்றது. இதைத் திருத்தத் தமிழிசைச் சங்கம் முயற்சி எடுத்தால் நற்பயன் விளையும் என்பது நிச்சயம். இப்பணியில் கலா ரசிகர்களாகிய பத்திரிகாசிரியர்களும் படமுதலாளிகளும் ஒத்துழைக்கும்படி விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

நான் குறிப்பிட்ட மற்றொரு பணி தமிழ்ப் பண்களைப் பற்றியதாகும். தமிழிசைச் சங்கம் பண் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும். சங்கத்தலைவரவர்கள் இந்த ஆராய்ச்சியைத் துவக்கியதற்காகத் தமிழகம் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது. முற்காலத்தில் தமிழரசர்கள் இப்பண்களைக் கோயில்களில் முறையாக ஓதுவதற்கு ஒழுங்கு செய்ததுபோல, இக் காலத்திற் கோயில்களைப் பரிபாலிக்கும் சென்னை அரசாங்கமும் ஆங்காங்குப்பண்களைக் கற்பிப்பதற்குத் தமிழிசைக் கல்லூரிகள் வைக்கும்படி தமிழிசைச் சங்கம் வற்புறுத்த வேண்டும். இச்சங்கத்தின் வாயிலாகத் தமிழகம் எங்கும் தமிழிசை முழங்குதற்கு எழிசையாய், இசைப் பயனுயுள்ள இறைவன் அருள் புரிவானாக.

நவீன கலவைச் சத்துணவு

இந்தியாவில் கண்டுபிடிக்கப் படுகின்றது

மைசூரிலுள்ள உணவுப் பொருள் ஆராய்ச்சி நிலையத்தார் உடல்நலம் விளக்கும் புதிய சத்துணவு முறைகளைக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

1 பசுப்பாலை யொத்த ஓர் குழப்புணவு நிலக்கடலையிலிருந்து ஆக்கப்படுகின்றது. இது சுவையாலும் நிறத்தாலும் பாலை யொத்தது.

2 நிலக்கடலை மாவும் மரவள்ளிமாவுங்கலந்து ஓர்கலவையுணவு அரிசியுணவுக்குப் பதிலாக அமைக்கப்படுகின்றது. இது அரிசியிலுங்கூடிய சத்துறுப்புக்களை உடையது.

3 வடிதட்டில்லாது கோப்பிப்பானம் உண்டாக்கும் வழிகாண முயல்கின்றனர்.

உணவு நெருக்கடியைத் தீர்க்க இவை உவந்த சாதனங்களாயமைகின்றன.

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்ல வுரட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
—நகை—
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
ருணிமார்க்ஓடுகள்
13½, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.
Std. 2

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond)
residing at 245; Navalar Road Jaffna. or and on behalf
of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at
their Press, the Saiva Prakasa Press, Vannarponnai,
Jaffna on Friday, December 28, 1951.